ஸ்ரீ

வரவரமுநயேநம:

# கெருடப்பத்து

இஃது

திருவெண்காடு

## ஆறுமுகசுவாமிகளால்

பார்வையிடப்பட்டுத்,

திருவொற்றியூர்

இரிசப்பமுதலியார்-குமாரர்


**பரசுராமமுதலியாரது**

பரப்பிரமமுத்திராக்ஷரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

பிரஜோத்பத்தி௵ கார்த்திகை௴.

ஸ்ரீ

வரவரமுநயே நம:

# கெருடப்பத்து.

ஓம் பூரணனே பதினாறுதிங்கட்சேரும்
பொருந்தியேயருக்கன்பதினெட்டுஞ்சேருங்
காரணனே கருமுகில்போன் மேனிசேருங்
கருணைபெரும்அஷ்டாக்ஷரங்கலந்துவாழும்
வாரணனேலட்சுமியோடெட்டுஞ்சேரும்
மதிமுகம்போல் நின்றிலங்குமாயாநேயா
ஆரணனேரகுராமாகெருடன்மீதில்
அன்புடனேயேறிவந்தருள்செய்வாயே (௧)
மந்திரமோ அஷ்டசித்துமெட்டுஞ்சேரும்
வாழ்கிரகமொன்பதுமேவந்துசேரும்
கந்திருவர்சணநாதராசிவர்க்கம்
கலைக்கியானநால்வேதங்கலந்துவாழும்
நந்திமுதல்தேவர்களுங்கெவுனயோகம்
நமஸ்கரித்துன்பாதம்நாளும்போற்ற
அந்திரமாய்நிறைந்திருக்குங்கெருடன்மீதில்
அன்புடனேயேறிவந்தருள்செய்வாயே (௨)
மூலமுதலோரெழுத்துநீர்தானாகும்
மூன்றெழுத்துமைந்தெழுத்துமொழியலாமோ
சீலமுதல் ஓம்-அங்-உங்-மங் றிங்கொன்றே
சிவனுடையதிருநாமம் நீர்தானாகும்
காலமுதல்-ஓம்-அங்உங்-மங் றிங்-கென்றே ;
கருணைபெறுமிவ்வெழுத்துநீர்தானாகும்

ஆலவிஷங்கையேந்துங்கெருடன்மீதில்
அன்புடனேயேறிவந்தருள்செய்வாயே (௩)
நவ்வென்றுங்கிலியென்யறும்ஓம் சிவாயமென்றும்
நமநமசிவசிவாராராவென்றும்
சவ்வென்றும்ஓங்காரரீங்காரமாகித்
தவமுடையவிவ்வெழுத்தும்நீர்தானாகும்
ஒவ்வென்றுமோம்நமோநாராயணா
உன்பாதமுச்சரித்துகந்துபோற்ற
அவ்வென்றும்ரகுராமாகெருடன்மீதில்
அன்புடனேயேறிவந்தருள்செய்வாயே (௪)
உதிக்கின்றசிவசொரூப முனக்கேயாகும்
ஓம்-அவ்வும்·உவ்வுங்·கிலியமென்றே
பதிக்கிசைந்தஐந்தெழுத்தைவெளியில்விட்டே
பச்சைமுகின்மேனியனேபணிந்தேனுன்னை
விதிக்கிசைந்தமெய்ப்பொருளே அரிகோவிந்தா
விளக்கொளிபோல்மெய்த்தவமேவிரும்பித்
தாதா-அதிற்கிசைந்தநடம்புரியுங்கெருடன்மீதில்
அன்புடனேயேறிவந்தருள்செய்வாயே (௫)
வேதமுதலாயிருந்தசிங்கரூபம்
விளங்குகின்றவிரணியனைவதையேசெய்தாய்
பூதமுதலாய்ப்பிறவும்புண்ணியநேயா
புகழ்ந்தவர்க்குத்துணைவருவாயசோதைபுத்ரா
நாதமுதல்விந்துவாயுயிருக்கெல்லாம்
நயம்பெறவேநறைந்திருக்கும் வரதபிர்ம
யாதவன்போல்நிறைந்திருக்குங்கெருடன்மீதில்

அன்புடனேயேறிவந்தருள்செய்வாயே (௬)

முக்கோணம்நாற்கோணமொழிந்தைங்கோண
முச்சுடரோயறுகோணமெண்கோணமாகும்
சட்கோணம்நாற்பத்துமூன்றுகோணம்
தந்திரமுஞ்சிதம்பரமுஞ்சகலசித்தும்
இக்கோணமிதமுதலாய்வகாரமட்டும்
இறையவனுய்த்தானிருந்து ரட்சித்தாலும்
அக்கோணமீதிருந்துகெருடன்மீதில்
அன்புடனேயேறிவந்தருள்செய்வாயே (௭)

பச்சைமுகில்மேனியனேயுனக்கேயிந்தப்
பார்தனிலேபத்தவதாரமுண்டு
மச்சமென்றுங்கூர்மமென்றும்வராகமென்றும்
வாமனென்றும்ராமனென்றும்பவுத்தனென்றுந்
துஷ்டனையடக்கமோகினி வேடங்கொண்டாய்
தோன்றியுன்சொரூபமெல்லாமறிவாரு
ண்டோஅச்சந்திர்க்கதனையாளக்கெருடன்மீதில்
அன்புடனேயேறிவந்தருள்செய்வாயே (௮)

வேதியனைத்தோன்றிவந்தாய்மாபெலிக்கு
விண்ணவர்க்காய்நர சிங்கரூபமானாய்
காதிமேல்ராகவனைக்கிஷ்ணனைகத்
தானுதித்துவந்திருந்தாய் தரணிவாழ்க
சோதனைகள்பார்த்திடுவோர் துதிப்போரதம்மைது
ஷ்டன்புவதைசெய்துலோகமாள்வாய்
ஆதிமுதலேழெழுத்தேந்கெருடன்மீதில்
அன்புடனேயேறிவந்தருள்செய்வாயே (௯)

# கெருடப்பத்து.

மாயவனேரகுராமா அருகேவாவா
வஞ்சனைகள்பறந்தோட நெஞ்சில்வாவா
காயாப்பூநிறமுடனே கனவில்வாவா
கருமுகில்மேனியனே யென்கருத்தில்வாவா
நாயகனே யென்னாவிலிருக்கவாவா
நாடோறுமுன்பாதந் துதிக்கவாவா
ஆயர்குலத் துதித்தவனே கெருடன்மீதில்.
அன்புடனே யேறிவந்தருள்செய்வாயே (௰)

முப்புரத்தையெரித்தவனேயிப்போவாவா
முகில்நிறமேஜகநாதா முன்னேவாவா
எப்பொழுதாந் துதிப்பவர்பங்கில்வாவா
ஏழைபங்கிலிருப்பவனேயிறங்கிவாவா
ஒப்பிலாமணிவிளக்கேயொளிபோல்வாவா,
ஓம்நமோநாராயணாவுகந்துவாவா
அப்பனேரகுராமா கெருடன்மீதில்.
அன்புடனே யேறிவந்தருள்செய்வாயே (௰௧)

துளபமணிமார்பழகாசுகத்தைத்தாதா
சுருதியேமெய்ப்பொருளேவரத்தைத்தாதா.
களபகஸ்தூரியனேகடாக்ஷந்தாதா
கஞ்சனைமுன்வென்றவனேகருணைதாதா
பழம்பொருளேசிவஜோதிபாக்கியந்தாதா
பத்திமுக்திசித்தி செய்யவுன்பாதந்தாதா
அளவிலாமெய்ப்பொருளே கெருடன்மீதில்,
அன்புடனே யேறிவந்தருள்செய்வாயே (௰௨)

கெருடப்பத்து-முற்றியது,

ஸ்ரீ

வரவரமுநயேநம:

# கஜேந்திரமோட்ச கீர்த்தனை.

இ-ம்-சுருட்டி-அதிதாளம்.

பல்லவி.

மூலமென்றழைத்தயானையைக்காத்தருள்
முகுந்தனைப்பணிநெஞ்சே

அநுபல்லவி.

சீலமேவுபத்மாசனன் வணங்கும்
திருவரங்கத்தரவணைமிசை யுறங்கும்
நீலமேனியனைநிறைபரஞ் சோதி
நித்தியநிர்மலநிராமய (ஆதி மூல)

சரணங்கள்

மழையெனமும்மதம்பொழியும்விகடதட
மத்தகஜங்கள் கோடி-இரு
மருங்குமணியணியாய் நெருங்கித்தொ
டர்ந்துவரவனத்தினில் நடந்தோடி
எழுகடலாமெனஅலைகள்பொன் மணிகொ
ழித்தெறியுமடுவைத் தேடி-வண்
டிசைக்கக்கவலம்விண்டுசொரக் குஞ்செந்தே
னிறைந்தினித்தண்புனல் நாடி.
அழகொடிறங்கியதில்முழுகியே பைய
அலப்புத்தணியும்படிஜலக்கிரீடை செய்ய
முழைநிகர்வாய்திறந்தனல்விழி பெய்ய
முதலைபிடித்தளவிற்கதறியே யுய்ய (மூல)
காலனைப்போலுக்ரமானகராவினைக்,

கண்டதனோ டோடி-வெகு
காலமனுவளவும்வெறுப்புச்சலிப்பில்லாமற்
கடுமையோ டோடி
ஸ்தூலசிகாமகமேருநிகருடலஞ்
சுப்பல்போல் வாடிக்-கால்
துவண்டுபராக்கிரமங் குறைந்துநடுங்கிவிழி
செருக்கிடக்களை மூடி
ஞாலமேலெதிர்த்தநீவினைப் பழுது
நடக்கொன்றுதலைமிசைத்துதிக்கைவைத்தழுது
ஓலமிட்டண்டசராசர முழுதும்
உடையவனென்வனன்சதியென்றுதொழுது ()
அடுத்துச்செவியில்வந்துநுழைய அபய
மென்னும்அந்தக்குரலைக்கேட்டு-டால்
அதலைதவழாழியிற்பெரியபிராட்டியோ
டாடியவிளை யாட்டு
விடுத்துயர்கருடன்மே லேறியாயிரம்படம்
விரித்தெழுமணிச் சூட்டுச்-சேஷ
மெத்தைதுறந்து திருமார்பிற்பளப ளென
விளங்கியஎழில் காட்டு
வடத்தணிகவுஸ்துவமகையைப்பொன் னுடை
வயங்கம்பசுந்துளபப்பரிமள வாடை
எடுத்திடவுருவஞ்செந்தாமரை யோடை
எனச்சிறந்திடக்ஷணத்தொழிரதிடப்பீடை (மூல)
விக்கதர்ச்சூரியனுந்தன் தொளிமழிங்கிப்பிர
மித்துகன்கள் கூசாமுடி

ஸ்ரீதுகவித்தநவரதனநெடுமகுடம்
விண்ணிடைவெளியில் வீச
எரிமணிப்பிரபைதிகழ்வாகுவலயமேகத்
திந்திரதனுமிசை யேகக்-கையில்
எந்தியபாஞ்சசன்னியஞ்சக்கராயுத
மிலங்கிடக் கைலாச
வரைபறைசிவன்முத லோரிதுவென்ன
மாயமோவென்றிறைஞ்சித்திர பன்னத்
திரிமுகம்வேர்த்துளங்குறுநகை தன்னைச்
சித்தமிரங்கிக்கிர்பைபெருகியே மின்ன (மூ)
காதினிற்குண்டலஜோதியினுலிருள்
பாதலத்தகன் றோட-மிகக்
ககனவமலர்மாரிசொரிசொரியத்தேவ
கானங்கின்னரர் பாடக்
கோதறவயிற்றில் வைத்திடுசகலாண்டமுங்
குலுக்கநான்மறை தேடச்செழுங்
கொந்தமலர்மாலை சரித்திடஅந்தர
துந்துமியொலி நீட
மரகதவாகளித்தாட வேகமாடிச் சென்று
மரகதமலைபோலெதிர் நின்று
நீதிகைத்தஞ்சாதேயஞ்சாதே யென்று
நெடியமுதலையைக்கொன்றிடர்தொலைத்தன்று
மூலமென்றழைத்தயானையைக்காத்தருள்
முகுந்தனைப்பணிநெஞ்சே
கஜேந்திரமோட்சகீர்த்தனை - முற்றுப்பெற்றது